### தமிழ்நாடு முதலமைச்சராக தளபதி பொறுப்பேற்ற பிறகு

# நீர்நிலைகள், காற்று மாசு முழுமையாகக் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது!

## புதுக்கோட்டையில் அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் பேட்டி!



புதுக்கோட்டை செப் 28-

தமிழ்நாடு சுற்றுச்சூழல் துறை, தன்னார்வ அமைப்புகள் உள்ளிட்டவைகள் ஒன்றிணைந்து 32 மாவட்டங்களில் ஒரு கோடி பனை விதைகளை நடவு செய்கின்ற இலக்கை நோக்கி பல்வேறு மாவட்டங்களில் பனை விதைகள் நடவு செய்கின்ற பணிகள் நடைபெற்று வருகிறது.

அதேபோல் புதுக்கோட்டை மாவட்டத்தில் கவிநாடு கண்மாயில் பனை விதைகள் நடவு செய்கின்ற பணியை தமிழ்நாடு சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி தலைமையில்தமிழ்நாடு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் சிவ.வீ. மெய்யநாதன் தொடங்கி வைத்தார். மேலும் இதில் புதுக்கோட்டை மாவட்ட ஆட்சியர் அருணா புதுக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் வை முத்துராஜா உள்ளிட்ட பலர் கலந்துகொண்டு பனை விதைகளை நடவு செய்தனர்.

அப்போது செய்தியாளர்களை சந்தித்த தமிழ்நாடு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் பேசுகையில்:

தமிழ்நாடு சுற்றுச்சூழல் துறை, தன்னார்வ அமைப்புகள் உள்ளிட்டவைகள் ஒன்றிணைந்து 32 மாவட்டங்களில் ஒரு கோடி பனை விதைகளை நடவு செய்கின்ற இலக்கை நோக்கி பல்வேறு மாவட்டங்களில் பனை விதைகள் நடவு செய்கின்ற பணிகள் நடைபெற்று வருகிறது.

அதேபோல் புதுக்கோட்டை மாவட்டத்தில் கவிநாடு கண்மாயில் பனை விதைகள் நடவு செய்கின்ற பணி தொடங்கி வைக்கப்பட்டுள்ளது. ஒரே நாளில் மாவட்டம் முழுவதும் ஒரு லட்சத்து 70 ஆயிரம் பனை விதைகள் நடவு செய்கின்ற பணி நடைபெற்று வருகிறது. மாவட்ட ஆட்சியர் 7 லட்சம் பனை விதைகளை சேகரித்து வைத்துள்ளார். இந்த ஏழு லட்சம் பனை விதைகளும் ஒரு வார காலத்திற்குள் நடவு செய்யப்பட்டு கூடுதலாக தமிழ்நாட்டில் அதிக பனை விதைகளை நடவு செய்கின்ற மாவட்டமாக புதுக்கோட்டை என்கின்ற இலக்கை நோக்கி பணிகள் நடைபெற்று வருகிறது. பயோ மைனிங் 249 இடங்களில் நடைபெற்றது. 145க்கும் மேற்பட்ட இடங்களில் முழுமையாக பயோ மைனிங் முறையில் குப்பைகள் அகற்றப்பட்டு அந்த இடங்கள் உயிர் நிலங்களாக மீட்கப்பட்டு மியோ ஹாக்கி முறையில் குறுங்காடுகள் அமைக்கப்பட்டு நிலத்தை மீட்டெடுக்கின்ற வகையில் 200 கோடி ரூபாய் சொத்துக்கள் மீட்டெடுக்கப்பட்டுள்ளது. இதைத்தவிர மற்ற இடங்களிலும் பணிகள் நடைபெற்ற வருகிறது. விரைவில் பயோ மைனிங் முறையில் எங்கே எல்லாம் நடைபெற்றதோ அங்கே எல்லாம் முழுமையாக குப்பைகள் பிரித்தெடுக்கப்பட்டு அந்த இடங்கள் உயிர் நிலங்களாக மீட்கப்படும்.

கார்பன் அதிகளவு வெளியேற்றத்தின் காரணமாக இன்று குளோபல் வார்மிங் ஏற்பட்டு தற்போது கூட வெயில் அதிகளவு உள்ளது. மேலும் அதன் மூலமாக பல்வேறு பேரிடர்களை சந்தித்து வருகிறோம். குறிப்பாக புயல் வெள்ளங்களைக் கடந்து அண்மையில் கேரளாவில் ஏற்பட்ட நிலச்சரிவு என பல்வேறு பாதிப்புகளை சந்தித்து வருகிறோம். தற்போது செப்டம்பர் மாதத்தில் கூட 40 டிகிரி செல்சியஸில் வெயிலின் தாக்கம் உள்ளது. அதனால் தமிழ்நாடு முதலமைச்சர் முதற்கட்டமாக பசுமையான தமிழ்நாடாக மாற்ற வேண்டும் என்ற நோக்கத்தோடு 23 சதவீதம் தமிழ்நாட்டில் உள்ள வனப்பரப்பை 33 சதவீதமாக உயர்த்துவதற்கு பசுமை தமிழகம் என்ற திட்டத்தை தொடங்கி வைத்தார். தற்போது இரண்டாம் ஆண்டு விழாவை தொடங்கி வைத்துள்ளோம். அந்த அடிப்படையில் இதுவரை 7 கோடி மரங்கள் நடவு செய்யப்பட்டுள்ளது. இந்த ஆண்டு 10 கோடி மரங்கள் நடவு செய்ய இலக்கு நிர்ணயம் செய்து அந்த பணிகளை தொடங்கியுள்ளோம். அதேபோல் கடலோரப் பகுதிகளில் கடல் அரிப்பை தடுப்பதற்கு பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

தமிழ்நாட்டில் உள்ள ஈர நிலங்களை மீட்ப தற்காக நடவடிக்கைகள் இந்தியாவில் தமிழ்நாட்டில் தான் 16 ராம்சார் சைட் கண்டறியப்பட்டுள்ளது. தமிழ்நாடு முதலமைச்சராக தளபதி அவர்கள் பொறுப்பேற்ற பிறகு நீர்நிலைகள் காற்று மாசு முழுமையாக கட்டுப்படுத்தப்பட்டுள்ளது. இயற்கை சூழ்ந்த பூமியாக, பசுமை சூழ்ந்த பூமியாக வனத்துக்குள் தமிழ்நாடு என்ற நிலையை நோக்கி தமிழ்நாடு முதலமைச்சர் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறார் என்று தெரிவித்தார்.

### தலைமை : இல.பத்மநாபன் - வரவேற்புரை : மு.ஜெயக்குமார் - சு.முருகானந்தம்

# திருப்பூர் தெற்கு மாவட்ட இளைஞர் அணி சார்பில் - கலைஞர் நூலகம் திறப்பு விழா!

## அமைச்சர்கள் மு.பெ.சாமிநாதன் - என்.கயல்விழி செல்வராஜ் - கே.இ.பிரகாஷ் எம்.பி. - கே.ஈஸ்வரசாமி எம்.பி. பங்கேற்பு!

திருப்பூர், செப். 28-

திருப்பூர் தெற்கு மாவட்ட இளைஞர் அணி சார்பில் (29.09.2024 ஞாயிற்றுக்கிழமை) அன்று மாலை 4.30 மணியளவில் தாராபுரத்தில் கலைஞர் நூலகம் திறப்பு விழா மாவட்டக் கழக செயலாளர், திருப்பூர் மாநகராட்சி 4 ம் மண்டலத்தலைவர் இல.பத்மநாபன் தலைமையில் மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் மு.ஜெயக்குமார், தாராபுரம் நகர செயலாளர் சு.முருகானந்தம் வரவேற்புரையில் மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் வழக்கறிஞர் ச.யுவராஜ், சா.கவியரசு, த.ஆரோன் செல்வராஜ், என்.எஸ்.கே.சிவக்குமார், ந.வீரகாளி வெங்கடேஷ் ஆகியோர் முன்னிலையில் நடைபெற உள்ளது. முத்தமிழறிஞர் கலைஞர் நூலகத்தை தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர், கழக உயர்நிலை செயல்திட்டக்குழு உறுப்பினர் மு.பெ.சாமிநாதன், ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர், கழக மகளிர் அணி துணை செயலாளர் என்.கயல்விழி செல்வராஜ் ஆகியோர் திறந்து வைக்கின்றனர், கல்வெட்டினை கழக இளைஞர் அணி துணை செயலாளர், ஈரோடு நாடாளுமன்ற உறுப்பினர் கே.இ.பிரகாஷ், பொள்ளாச்சி நாடாளுமன்ற உறுப்பினர் கே.ஈஸ்வரசாமி ஆகியோர் திறந்து வைக்கின்றனர்.

இவ்விழாவில் மாநில மகளிர் தொண்டரணி துணைச் செயலாளர் சத்யா பழனிக்குமார், மாநில விளையாட்டு மேம்பாட்டு அணி துணை செயலாளர் எஸ். கார்த்திக், மாவட்ட அவைத்தலைவர், மடத்துக்குளம் சட்டமன்ற முன்னாள் உறுப்பினர் இரா. ஜெயராமகிருஷ்ணன், துணை செயலாளர்கள் கே.ஆர்.முத்துக்குமார், தாராபுரம் சட்டமன்ற முன்னாள் உறுப்பினர் பிரபாவதி பெரியசாமி, பி.சக்திவேல், மாவட்ட பொருளாளர் கே.எம்.முபாரக்அலி, தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் கே.எஸ்.தனசேகர், சி.சியாம்பிரசாத், வி.மகாலிங்கம், பொதுக்குழு உறுப்பினர்கள் சு.கருணாகரன்,

ஆர்.சிவக்குமார், யு.என். பி.குமார், கார்த்திகேயன், எம்.பர்வதவர்த்தினி, சா.மெய்யப்பன், எம்.ஆர். பாபு, என்.ராமசாமி, நகர கழக செயலாளர்கள் செ. வேலுச்சாமி, சபரி எஸ்.முருகானந்தம், நா.சேமலையப்பன, ஒன்றிய கழக செயலாளர்கள் எஸ்.வி.செந்தில் குமார், எஸ்.சந்திரசேகர், சிவ.செந்தில்குமார், ப.பழனிச்சாமி, கே.துரை. தமிழரசு, சி.கருணைபிரகாஷ், கே.கே.சிவானந்தன், எஸ். கே.எஸ்.செல்வம், சி.பிரபு கே.செந்தில் குமார், கே.சந்திரசேகரன், எம்.ஏ. ஷரகுல் அமீது, டி.செழியன், எஸ். கே.எம்.மெய்ஞானமூர்த்தி, சா.ராஜமாணிக்கம், அனிக்கடவு சு.கிரி, அடிவள்ளி எம்.எஸ்.முரளி, எஸ்.என். காணியப்பன், என்.கமலக்கண்ணன், ஜி.கதிர்வேல்,

பேரூர் கழக செயலாளர்கள் கே.கே.துரைசாமி, க. தெண்டபாணி, கோ. சுரேஷ், ரா.பன்னீர் செல்வம் எஸ்.அன்பரசு, கு.செண்பகம் பாலு, எஸ்.எம்.ராமசாமி, ஆர்.ஏ.சாதிக்அலி, எம்.ஆச்சிமுத்து, என்.பாலகிருஷ்ணன், ஏ.பாலகிருஷ்ணன், வெ.உதயகுமார், கே.காளிமுத்து, எம் எஸ்.ஆறுச்சாமி, அ. அகத்தூர்சாமி, மாவட்ட சார்பு அணி அமைப்பாளர்கள் மகளிர் அணி தலைவர், தாராபுரம் சட்டமன்ற முன்னாள் உறுப்பினர் இரா. சரஸ்வதி, மாவட்ட வழக்கறிஞர் அணித்தலைவர் கே.செல்வராஜ்,

மாணவர் அணி கோ.குகன், மகளிர் அணி செ.அனிதா, மகளிர் தொண்டர் அணி எல்.லதா, விவசாய அணி வி.ரகுபதி, விவசாய தொழிலாளர் அணி பா.சுப்பிரமணி, நெசவாளர் அணி கே.எஸ்.பி. ராஜேந்திரன், இலக்கிய அணி தங்கவேல், கலை இலக்கிய பகுத்தறிவு பேரவை ஆர்.ஜி.முத்துக்குமார், மீனவர் அணி அ.தேவராஜ், பொறியாளர் அணி கு.பாப்புக்கண்ணன், சிறுபான்மையினர் நல உரிமை பிரிவு பா.கலைச்செழியன், ஆதிதிராவிடர் நலக்குழு மா.கன்னிமுத்து, வர்த்தகர் அணி சி.தங்கராஜ், வழக்கறிஞர் அணி டி.எஸ்.பொன்ராஜ், மருத்துவ அணி ந.பாலசுப்பிரமணியன், தொண்டர் அணி தென்றல் ரமேஷ், தகவல் தொழில்நுட்ப அணி ஆ.நவீன், அயலக அணி சு.சிவராஜா, அமைப்புச்சாரா ஓட்டுநர் அணி க.சண்முகசுந்தரம், விளையாட்டு மேம்பாட்டு அணி ஆர்.சக்திகுமார், தொழிலாளர் அணி நா. மயில்சாமி உள்பட மாநில, மாவட்ட கழக நிர்வாகிகள்,

தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள் ஒன்றிய, நகர, பேரூர் கழக நிர்வாகிகள், இந்நாள், முன்னாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், துணை அமைப்புகளின் நிர்வாகிகள், வார்டு கழக, கிளை கழக நிர்வாகிகள், இன்னாள், முன்னாள் மக்கள் பிரதிநிதிகள், கழக உடன்பிறப்புகள் பலர் கலந்து கொண்டு சிறப்பிக்க உள்ளனர்.

இறுதியில் மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் கே.கே.ரவிச்சந்திரன் நன்றியுரையாற்றுகிறார்.



விழுப்புரம் மாவட்டம் செஞ்சிக்கோட்டையில் பொதுமக்கள் மற்றும் உள்ளாட்சி பிரதிநிதிகள் கருத்துக் கேட்புக் கூட்டத்தில் சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு தமிழர்கள் நலத்துறை அமைச்சர் செஞ்சி மஸ்தான் சிறப்புரையாற்றினார். அருகில் ஆரணி எம்.பி. தரணிவேந்தன், கூடுதல் ஆட்சியர் ஸ்ருதன் ஜெய் நாராயணன் உள்ளனர்.

# தருமபுரி கிழக்கு மாவட்டத்தில் வாக்காளர் சரிபார்த்தல் பணி!

## மாவட்டச் செயலாளர் தடங்கம் பெ. சுப்பிரமணி அறிக்கை!



தருமபுரி, செப்.28-

தருமபுரி கிழக்கு மாவட்ட திமுக நிர்வாகிகளுக்கும் மற்றும் கழக தோழர்களுக்கும், உள்ளாட்சி பிரதிநிதிகளுக்கும், வாக்குச்சாவடி நிலை முகவர்களுக்கும் (BLA2) மற்றும் பூத் கமிட்டி உறுப்பினர்களுக்கும்(Blc) வாக்களார் பட்டியல் சரிபார்த்தல் மற்றும் வாக்காளார் சேர்த்தல் பணியை சிறப்பாக செய்திட மாவட்ட கழக செயலாளர் தடங்கம் பெ.சுப்ரமணி விடுத்துள்ள வேண்டுகோள் வருமாறு:-

தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் அண்ணன் தளபதி அவர்களின் அறிவுறுத்தலின்படி, இந்திய தேர்தல் ஆணையம் வருகின்ற 01.01.2025ஐ தகுதியேற்படுத்தும் நாளாகக் கொண்டு தமிழகத்திலுள்ள வாக்காளர் பட்டியல்கள் திருத்தம் செய்திட புகைப்படத்துடன் கூடிய வரைவு வாக்காளர் பட்டியலைத் தேர்தல் ஆணையம் 29.10.2024 அன்று வெளியிட உள்ளது. தருமபுரி கிழக்கு\ மாவட்டத்திலுள்ள அனைத்து சட்டமன்ற தொகுதிகளிலும், 29.10.2024 முதல் 28.11.2024 வரை புதிய வாக்காளர்களைச் சேர்க்கவும் மற்றும் பெயர்கள் நீக்கவும் திருத்தம் செய்யவும் மனுச் செய்ய கால அவகாசம் கொடுக்கப்பட்டுள்ளது.

இதுதவிர தலைமை தேர்தல் அதிகாரி அறிவிக்கும் சனி, ஞாயிறு நாட்களில் நிர்ணயிக்கப்பட்ட வாக்குச்சாவடி மையங்களில் காலை 9.30 மணி முதல் மாலை 5.30 வரை சிறப்பு முகாம்கள் நடைபெறவுள்ளது. அதன்படி, இந்த நாட்களில் வாக்காளரே தாமாக முன்வந்து வாக்காளர்கள் பட்டியலில் உள்ள தங்களது விவரங்களை சரிபார்த்து, விடுபட்ட வாக்காளர்களும், இடம் மாறிய வாக்காளர்களும், 1.1.2025 அன்று 18 வயது நிரம்பக்கூடிய புதிய வாக்காளர்களும் தங்கள் பெயர்களை சேர்க்க, நீக்க, திருத்தங்கள் மேற்கொள்வதற்கான படிவங்களை பெற்று, பூர்த்தி செய்து, அந்தப் படிவங்களை அந்தந்த வாக்குச்சாவடி மையங்களில் கொடுக்க வேண்டும்.

இதனடிப்படையில் 2025ஆம் ஆண்டு ஜனவரி 1ந் தேதி 18 வயது நிறைந்தவர்களின் பெயர்களையும், வாக்காளர் பட்டியலில் இதுவரை இடம் பெறாத பெயர்களையும், புதிதாக குடிபெயர்ந்து உள்ள வாக்களர்களின் பெயர்களையும் வாக்காளர் பட்டியலில் சேர்க்கவும், தொகுதியிலிருந்து இடம்பெயர்ந்தவர்கள் மற்றும் இறந்தவர்கள் பெயர்களை தற்போதுள்ள பட்டியலில் இருந்து நீக்கவும், தீவிர நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென கேட்டுக் கொள்கிறேன். வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்த்தலுக்கு படிவம் 6லும், பெயர் நீக்கம் செய்திட படிவம் 7லும், வாக்காளர் விபரங்களில் உள்ள தவறுகளை திருத்தம் செய்திட, ஒரே சட்டமன்றத் தொகுதிக்குள் திருத்தம், முகவரி மாற்றம், நகல் வாக்காளர் அடையாள அட்டை பெற (Replacement Id Card) படிவம் 8லும், அயல்நாடு வாழ் வாக்காளர் சேர்க்க (NRI Voters) படிவம் 6ஏ, ஆதார் எண் வாக்காளர் அடையாள அட்டையுடன் இணைக்க படிவம் 6பி, விண்ணப்பம் பூர்த்தி செய்து அளித்திட வேண்டும்.

மேலும் வாக்கு சேர்ப்பதற்கு www.nvsp.in. மற்றும் www.voterportal.eci.gov.in என்ற இணைய தளத்திலும் விண்ணப்பிக்கலாம். இது வரை வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்க்கப்படாதவர்கள் மற்றும் இடம் மாறி வந்து வாக்காளர்களாக சேர்க்க விரும்புபவர்களும், பெயர் சேர்த்துக் கொள்ள வேண்டிய விண்ணப்படிவமான படிவம்6ஐ முழுமையாக பூர்த்தி செய்திட வேண்டும். குறிப்பாக படிவம்6ன் கலம் IVல் மனுதாரரது முந்தைய முகவரியினை தவறாது எழுதிட வேண்டும் என்றும் கேட்டுக் கொள்கிறேன். 1. வரைவு வாக்காளர் பட்டியல் வெளியிடுதல் 29.10.2024 2. பெயர்களைச் சேர்க்க / நீக்க / திருத்தம் செய்வதற்கு மனு கொடுக்க கால அவகாசம் 29.10.2024 முதல் 28.11.2024 வரை 3. சிறப்பு முகாம் நடத்தப்படும் நாட்கள் தலைமை தேர்தல் அதிகாரி அறிவிக்கும் சனி, ஞாயிறு நாட்கள் 4. இறுதி வாக்காளர் பட்டியல் வெளியிடப்படும் நாள் 06.01.2025 மேலும் மேற்கண்ட நாட்களில் நடைபெறும் வாக்காளர் சேர்ப்பு பணியிலும், சிறப்பு முகாம்கள் நடைபெறும் நாட்களிலும், தருமபுரி கிழக்கு மாவட்டத்தைச் சேர்ந்த, மாநில, மாவட்டக் கழக நிர்வாகிகள், ஒன்றிய, நகர, பேரூர், கிளைக் கழக செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள், தலைமை செயற்குழு,

பொதுக்குழு உறுப்பினர்கள், முன்னாள், இந்நாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், முன்னாள், இந்நாள் ஊராட்சி ஒன்றிய குழுதலைவர்கள், நகரமன்ற தலைவர்கள், பேரூராட்சி மன்ற தலைவர்கள், ஊராட்சி மன்ற தலைவர்கள் மற்றும் துணை தலைவர்கள், மாவட்ட, ஒன்றிய குழு உறுப்பினர்கள், மற்றும் நகராட்சி, பேரூராட்சி, ஊராட்சி மன்ற உறுப்பினர்கள்,

முந்நாள், இந்நாள் உள்ளாட்சி பிரதிநிதிகள், , மற்றும் வாக்குச்சாவடி நிலைக் குழு முகவர்கள் (BLA2), பூத் கமிட்டி உறுப்பினர்கள் (Blc) மற்றும் கழக சார்பு அணிகளின் நிர்வாகிகள், கழக தோழர்கள் அனைவரும் இந்த வாய்ப்பினை பயன்படுத்தி தங்களை முழுமையாக ஈடுபடுத்திக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன். மேலும் இந்த பணியின் விவரத்தினை மாவட்ட கழகத்திற்கு தெரிவிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

குறிப்பு: வாக்காளர் சேர்க்கும் பணியின்போது நமது கழகத்தின் சார்பாக நியமிக்கப்பட்டுள்ள BLA2க்கள் மற்றும் பூத் கமிட்டி உறுப்பினர்கள் (blc) இந்த பணியினை முழுமையாக இருந்து 2026 சட்டமன்ற தேர்தல் வரை, தேர்தல் ஆணையத்தால் நியமிக்கப்பட்டுள்ள BLO உடன் இருந்து கண்காணிக்க வேண்டும்.

### நெல்லையில் ரூ.1,260 கோடியில் சோலார் மின்உற்பத்தி ஆலை!

# நெல்லை கங்கைகொண்டானில் சோலார் செல் உற்பத்தி தொழிற்சாலை!

## புதிய ஆலையால் 3000 பேருக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும்!

சென்னை, செப்.28-

திருநெல்வேலியில் ஆயிரத்து 260 கோடி ரூபாய் முதலீட்டில் சோலார் செல் உற்பத்தி ஆலை அமைக்க சுற்றுச்சூழல் அனுமதி கோரி விக்ரம் சோலார் நிறுவனம் விண்ணப்பித்துள்ளது.

இந்தியாவில் உள்ள மிகப்பெரிய சோலார் மின் உற்பத்தி நிறுவனங்களில் ஒன்றாக விக்ரம் மின் உற்பத்தி நிறுவனம் உள்ளது. விக்ரம் சோலார் மின்உற்பத்தி நிறுவனம் திருநெல்வேலி மாவட்டம் கங்கைகொண்டான் சிப்காட்டில் ஆயிரத்து 260 கோடி முதலீட்டில் சோலார் செல் உற்பத்தி தொழிற்சாலையை அமைக்க உள்ளது.

இதற்காக சுற்றுச்சூழல் அனுமதி கோரி விக்ரம் சோலார் நிறுவனம் விண்ணப்பித்துள்ளது. இந்த ஆலையில் 3 ஜிகா வாட் சோலார் செல் மற்றும் பிவி சோலார் மாடியூல் உற்பத்தி செய்ய விக்ரம் சோலார் மின்உற்பத்தி நிறுவனம் திட்டமிட்டுள்ளது.

ஆயிரத்து 260 கோடி ரூபாய் முதலீட்டில் 314 ஏக்கர் நிலப்பரப்பில் அமையவுள்ள இந்த தொழிற்சாலை மூலம் 3 ஆயிரம் பேருக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும். இத்திட்டத்தின் மூலம் தமிழ்நாடு அரசின் அடுத்த 10 ஆண்டுகளில், சோலார் மின்சார உற்பத்தியை அதிகரிக்கும் திட்டத்தை எளிதாக அடைய முடியும்.



திருவள்ளூர் மாவட்டம் பூவிருந்தவல்லி தொகுதிக்குட்பட்ட எல்லாபுரம் ஒன்றியம் வெங்கல் மற்றும் குருவாயல் ஆகிய கிராமங்களில் அரசு மேல்நிலைப்பள்ளி மாணவ – மாணவிகளுக்கு பள்ளிக்கல்வித்துறை சார்பில் விலையில்லா மிதிவண்டிகள் வழங்கும் விழா நடைபெற்றது. இதில் பூவிருந்தவல்லி சட்ட மன்ற உறுப்பினர் ஆ.கிருஷ்ணசாமி 414 மிதிவண்டிகளை வழங்கினர். உடன் ஒன்றிய செயலாளர்கள் தங்கம் முரளி, மாவட்ட துணைச் செயலாளர் வி. ஜெ.சீனிவாசன், தலைமை ஆசிரியர் பவானி, செந்தில், பள்ளி மேலாண்மை குழு தலைவர் அனிதா ஸ்ரீபன், நிர்வாகிகள் முனுசாமி, டி.பாஸ்கர், ஒ.ஏ.நாகலிங்கம், லோகநாதன், எம்.எல். டேவிட், ரஜினி, நாராயணசாமி, சுப்பிரமணி, சண்முகம், அண்ணாமலை, ஜெகன், ராஜேஷ், செல்வம், ஆரா சுரேஷ் , தமிழ் மூர்த்தி உள்பட பலர் உள்ளனர்.

### தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் சார்பில் அடுக்குமாடி குடியிருப்புகளில்

# மகளிர் சுய உதவிக் குழுக்களின் தயாரிப்புப் பொருள்கள் விற்பனை!

## அபார்ட்மெண்ட் பஜார் துவக்கம்!

சென்னை, செப்.28-

தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் வழிகாட்டுதலில் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் கீழ் செயல்பட்டுள்ள மகளிர் சுய உதவிக் குழு உறுப்பினர்களின் உற்பத்திப் பொருட்களை சந்தைப்படுத்திட ஏதுவாகவும், நகர்ப்புற மக்கள் மத்தியில் சுய உதவிக் குழுக்களின் பொருட்களை பிரபலப்படுத்திடவும் 25 அடுக்குமாடி குடியிருப்புகளில் கண்காட்சிகள் நடத்தப்படும் என மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களால் சட்டமன்றக் கூட்டத் தொடரில் அறிவிக்கப்பட்டது.

அந்த அறிவிப்பினை நடைமுறைப்படுத்திடும் வகையில் இன்று (27.09.2024) செங்கல்பட்டு மாவட்டம், படூரில் உள்ள ஹிராநந்தானி அடுக்குமாடி குடியிருப்பில் மகளிர் சுய உதவிக் குழுக்களின் தயாரிப்புப் பொருட்களை விற்பனை செய்திடும் அபார்ட்மெண்ட் பஜார் துவக்கப்பட்டுள்ளது.

27.09.2024 மற்றும் 28.09.2204 ஆகிய இரண்டு நாட்கள் நடைபெறும் இந்த அபார்ட்மெண்ட் பஜாரில், தமிழ்நாட்டின் பல்வேறு மாவட்டங்களில் செயல்படும் மகளிர் சுய உதவிக் குழுக்கள் தயாரிக்கும் பொருட்களைக் கொண்ட 20 அரங்குகளில் நவராத்திரி பண்டிகைக்கு தேவையான கொலு பொம்மைகள், பூஜை பொருட்கள், பரிசு பொருட்கள், பாரம்பரிய அரிசி வகைகள், கைவினைப் பொருட்கள், கைத்தறி துணி வகைகள் போன்ற அனைத்து பொருட்களும் விற்பனை செய்யப்படுகிறது. மேலும் வாடிக்கையாளர்களுக்கான பல்வேறு நிகழ்ச்சிகளும் நடைபெற உள்ளது.

மகளிர் சுய உதவிக் குழுக்களின் தரமான தயாரிப்புகளை அனைத்துத் தரப்பினரும் வாங்கி, அவர்களின் வாழ்வாதார முன்னேற்றத்திற்கு உதவிட வேண்டும் எனக் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

### தி.மு.கழகத்தின் மூத்த உறுப்பினர்

# பாப்பம்மாள் மறைவெய்தினார்!

## கழகத்தினர் அஞ்சலி!

கோவை, செப்.28-

தி.மு.கழகத்தின் மூத்த உறுப்பினர் பாப்பம்மாள் (வயது 108) நேற்று மறைவெய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.

மறைந்த பாப்பம்மாள் அவர்கள் கோவை, மேட்டுப்பாளையத்தையடுத்த தேக்கம்பட்டியைச் சேர்ந்தவர்.

விவசாயத்தில் பாப்பம்மாள் அவர்களின் பங்களிப்பைப் பாராட்டி 2021-ஆம் ஆண்டு ஒன்றிய அரசு பத்மஸ்ரீ விருது வழங்கியது.

2024 செப்டம்பர் 17-ந் தேதி நடைபெற்ற கழக முப்பெரும் விழாவில், பாப்பம்மாளுக்கு தந்தை பெரியார் விருதுக்குத் தேர்வு செய்யப்பட்டு கழகத் தலைவர், முதல்வர் அவர்கள் அறிவித்தார்கள்.

பெரியார் விருதினை முப்பெரும் விழாவில் பாப்பம்மாள் சார்பில் அவரது உறவினர்கள் பெற்றுக் கொண்டனர்.

வயது மூப்பின் காரணமாக பாப்பம்மாள் அவர்கள் நேற்று மறைவெய்தினார். கழகத்தினர் ஏராளமானோர் நேரில் சென்று அன்னாருக்கு இறுதி அஞ்சலி செலுத்தினர்.